16th July 1962]

சாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானல், அதைப் பரிசீலனை செய்து, இந்தக் காலத்திற்குத் தகுந்தாற்போல் இந்த எஸ்டிமேட்டைத் திருத்து வதற்கும், அப்படித் திருத்தி திட்டங்களைத் துரிதமாக நிறைவேற்று வதற்கும் அரசாங்கம் வழி செய்யுமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : இது டைரக்டர் ஆப் பிஷரீசிடம் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் இதற்கு அதிகமாக தொகை கொடுக்க வேண்டுமென்று யோசனை சொல்லியிருக்கிருர்கள். ஆகவே, அதுவும் சர்க்கார் கவனத்திலே இருந்து வருகிறது.

திரு. முனு ஆதி : ஸார் பழவேற்காட்டிலிருந்து, மகாபலிபுரம், சென்னை வரையிலே உள்ள கடற்கரைப் பகுதிகளிலே குடியிருக்கும் மீனவ மக்கள் குளிரால் மிகவும் பாதிக்கப்படுகிருர்கள். ஆகவே, இந்த கடற்கரை ஓரங்களிலே உள்ள மீனவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளை இனிமேலாவது இந்த அரசினர் எடுப்பார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனதிபதி சர்க்கரை மன்ருடியார் : எங்கெங்கு மீனவர்கள் சொந்த இடம் கொடுக்கிருர்களோ, அங்கெல்லாம் வீடுகள் கட்டிக் கொடுப்பது என்பதுதான் அரசாங்கத்தின் திட்டமாக இருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : ஸார், மீனவர்கள் வசிக்கின்ற இடங்களை விட்டு, வேறு இடத்துக்கு அப்புறப்படுத்த மாட்டார்கள் என்ற உறுதியை இந்த அரசாங்கம் வழங்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனதிபதி சர்க்கரை மன்ருடியார் : அவசியம் ஏற்படுமானல், அப்புறப்படுத்த வேண்டுமென்று ஏற்பட்டால், அப்புறப்படுத்தத் தயாராகத்தான் இருக்கும் அரசாங்கம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், கடந்த சில வருஷங்களாக அனுமதிக்கப்பட்ட எல்லாத் திட்டங்களும் இன்னும் ஓராண்டுக் காலத்திற்குள் பூர்த்தி செய்யப்படும் என்ற உறுதியை இந்த அரசாங்கம் அளிக்குமா?

கனம் திரு. ந. நல்லசேனதிபதி சர்க்கரை மன்ருடியார் : இதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன். இப்போது தொகையை அதிகப்படுத்துவதற்கான பரிசீலனை செய்யப்படுவதால், இதைக் கூடிய சீக்கிரத்திலே எடுத்துச் செய்வதற்கு அரசாங்கம் முன்வரும் என்று சொல்கிறேன்.

நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வீடுகட்டும் திட்டம்

* 317—கேள்வி—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சையில் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கான வீடு கட்டும் திட்டம் எந்தந்த தாலுகாவில் அமுலாக்கப்பட்டுள்ளது ?

(இ) இல்லையென்ருல், காரணமென்ன ?

THE HON. SRI P. KAKKAN : (அ) The scheme of construction of houses for sweepers and scavengers is being implemented in Tiruvarur Municipality and in Valangaiman and Papanasam Panchayats in Thanjavur district.

(இ) Does not arise.

இரணியல் போலீஸ் நிலையம் கன்னியாக்குமரி மாவட்டம்

* 318 கேள்வி—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** (திரு. அ. சுவாமிதாஸ் அவர்கள் சார்பாக) : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் தொகுதியில் 26—2—1962 முதல் 5—3—1962 வரையிலும் இரணியல் போலீஸ் நிலையத்தாரால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை ?

(இ) அவற்றுள் சார்ஜ் ஷீட் தாக்கல் செய்யப்பட்டவை எத்தனை ?

(உ) என்னென்ன வகுப்புகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டன ?

(எ) ஏதாவது வழக்குகள் வாபஸ் பெறப்பட்டனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) 45.

(இ) 23.

(உ) The cases were charged under Scetions 147, 148, 323, 324, 325, 336, 341, 379, 380, 395, 426, 427, 444, 447, 448 and 454, Indian Penal Code depending on the nature of the offence in each case.

(எ) Yes. Eleven cases were withdrawn.

Palmyra climbers

* 319 *Q*.—SRI M. WILLIAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to classify palmyra climbers as Scheduled Castes for the purpose of granting all concessions granted to Harijans by the State and Central Governments?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI M. WILLIAM : In view of the most backward and miserable condition of the Palmyra climbers, will the Government be pleased to include them in the category of 'most-backward classes' and grant them all the concessions that are granted to Harijans?

THE HON. SRI P. KAKKAN : 'Chanan' is treated as the most-backward-community.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், பிற்பட்ட இனம், மிகவும் பிற்பட்ட இனம் என்று பாகுபடுத்தப்பட்டு, இவைகளின் பேரால் சலுகைகள் வழங்கப்பட்டு வருகிற நிலைமையில், இந்த 'சாணன்' வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரம் தொழிலின் அடிப்படையில் சலுகைகள் கொடுக்கப்படுவதாக அரசாங்கக் குறிப்பில் காணப்படுகிறது. அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : யார் யார் மிகவும் கஷ்டப்படும் நிலைமையிலே இருக்கிறார்களோ, அதாவது மரம் ஏறி தொழில் நடத்துகின்றவர்களுக்குத்தான் அப்பேர்ப்பட்ட சலுகை கொடுக்கப்படுகிறது. அந்த வகையிலே தான் இந்த 'சாணன்' என்பது கருதப்பட வேண்டுமென்று இந்த அரசாங்கம் ஒரு முடிவு செய்திருக்கிறது.

SRI M. WILLIAM : Do 'tappers' come in that category?

MR. SPEAKER : 'Tappers'?

SRI M. WILLIAM : I mean 'Palmyra climbers'.

THE HON. SRI P. KAKKAN : They are considered as a most-backward community.